4th February 1966]

மதுரை நகர்

*99 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகரை விரிவுபடுத்தி கவர்ச்சியான நகரம் ஆக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) மதுரை நகராட்சிக் கமிஷனர் குறிப்பிட்ட சில கிராமங்களை மதுரை நகராட்சிக்குள் சேர்க்க வேண்டுமென்று சில செயற்குறிப்புகளை அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளார். அவை ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

சேதுக் கால்வாய் திட்டம்

*100 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேதுக்கால்வாய் திட்டத்திற்கான இறுதி எஸ்டிமேட் (Final Estimate) தயாரிக்கப்பட்டுவிட்டதா ?

(இ) ஆமெனில், அதன் உத்தேச மதிப்பீடு எவ்வளவு ?

(உ) இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தின் முடிவு என்ன ?

கனம் திரு. நல்ல சேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) முதல் (உ) வரை : சேது சமுத்திரத் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவை இந்திய அரசு இன்னும் இறுதியாக முடிவுசெய்யவில்லை.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*— An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) ALLEGED LAWLESSNESS IN THE OFFICE OF 'DAILY THANTHI'.

MR SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment motion to discuss the alleged situation arising out of lawlessness in the office of the 'Daily Thanthi'. I would like to know how it is a matter of public importance. Is it not a matter concerning a few individuals only ? I think the matter does not involve more than ordinary administration of law. Anyway the hon. Member may explain how the matter comes under an adjournment motion.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க உரிமையுண்டு. அந்தக் கட்டடம் ஒரு பத்திரிகையாலயத்திற்கு, தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இருக்கலாம். நான் 'தினத் தந்தி' பத்திரிகையாலயத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன். முதலாளியே அடியாட்களை வைத்து தொழிலாளர்களை 'வேலையிலி